
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**885**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# மாநாடு

ர.பிரகாசு

**70**

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**




## திக்கெட்டும் பரவிய சுயமரியாதை இயக்கம்!

அரசியல் அதிகாரத்திற்கும் சமூக சமத்துவத்திற்கும் இடையிலான மெல்லிய கோடுதான் நீதிக்கட்சியில் இருந்து சுயமரியாதை இயக்கத்திற்கு தனித்துவமான அடையாளத்தைத் தந்தது.

ஒடுக்கப்பட்ட மக்கள் சுயமரியாதை இயக்கத்தை நோக்கி வர சமூகக் காரணங்கள் ஆயிரம் இருந்தன. அவற்றை விட பெரியார் என்ற ஒற்றைக் காரணம் மிக முக்கியமானது. சமூக சீர்திருத்தத்தில் போலித்தனம் இல்லாத அவரின் செயல்பாடும், தன்னிகரற்ற துணிச்சலும் ஒடுக்கப்பட்ட மக்கள் அலை அலையாக சுயமரியாதை இயக்கத்தை நோக்கி படையெடுக்க அடிப்படைக் காரணிகளாய் இருந்தன. அதை உணர்த்திய மாநாடுகளில் ஒன்று லால்குடி தாலுகா முதலாவது சுயமரியாதை மாநாடு.

09, 10-06-1928 ஆகிய தேதிகளில் லால்குடியில் இம்மாநாடு நடைபெற்றது. அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள் மாநாட்டைத் திறந்துவைக்க, நொச்சியம் வீராசாமி பிள்ளை வரவேற்புரை நிகழ்த்தினார். மாநாடு நடைபெற்ற மண்டபம் நிறைந்து, வெளியே மூவாயிரம் பேர் குழுமியிருந்தனர். மாநாட்டுத் தலைவர் ஆசனத்தில் பி.டி.இராசன் அமர்ந்ததும், அன்றைய முதலமைச்சர் டாக்டர் சுப்பராயன், சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ணன் நாயர், டாக்டர் நடேச முதலியார் உள்ளிட்ட பலர் அனுப்பியிருந்த வாழ்த்துத் தந்திகள் வாசிக்கப்பட்டன.

பிறகு, மாநாட்டுத் தலைவர் பி.டி.இராசன் உரையாற்றும்போது, ‘‘சுயமரியாதை இயக்கத்தின் எண்ணங்களும் கொள்கைகளும் காலஞ்சென்ற திருவாளர்கள் டாக்டர் நாயர், சர் பி.டி.தியாகராயச் செட்டியார் அவர்களாலும் தொடங்கப்பெற்றுள்ள பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் கொள்கைகளைப் போலவே உள்ளன. அந்த இயக்கத்தின் தொடக்கத்தில் அரசியல் பற்றிலேயே மிகுதியான காலம்சென்றது. பின்னால் தோன்றிய இந்த இயக்கத்தில் சமூக சீர்த் திருத்தத்திற்கு அதிக கவனம் செலுத்தப்படுகிறது. அரசியல் குறைகளை விட, சமூகத்தில் உள்ள கெடுதிகளே நிரம்பவும் கெட்டவைகள் என்றும், இவைகளை நீக்குவதே நம்மை அரசியல் வெற்றிக்கு அருகில் கொண்டு செல்லும் என்றும் ஈ.வெ.ராம சாமி நாயக்கர் கருதுவதே அதற்குக் காரணம்” என்றார்.

மேலும், “இப்பொழுது மக்களுடைய முன்னேற்றத் திற்கு இடையூறாக இருக்கிற பழக்க வழக்கங்களும் முறைகளும் முன்னொரு காலத்தில் எவ்வளவு உபயோகமுள்ளவைகளாக இருந்திருந்தாலும், இப்பொழுது அவைகள் தடைகளாக இருந்தால் அவைகளுக்கெல்லாம் நாயக்கர் எதிரிதான்” என்றும் அவர் கூறியது பெரியாருக்கு இறுதிவரை பொருந்திப் போனது. மதிய உணவுக்குப் பின்னர், தந்தை பெரியார் தலைமையில், தீர்மான ஆலோசனைக் கூட்டம் கூடியது. பிரதிநிதிகளின் ஏக ஒப்புதலுடன் 30 தீர்மானங்கள் உருவாக்கப்பட்டு, மறுநாள் நிறைவேற்றப்பட்டன.

இரண்டு நாட்களிலும் மண்டபத்திற்கு முன்பாக மாலையில் பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன. கண்ணப்பர், பட்டுக்கோட்டை அழகிரி, தண்டபாணி பிள்ளை, அருப்புக் கோட்டை கருப்பையா பிள்ளை, விருதுபட்டி லட்சுமண பிள்ளை, அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள், ஜே.என்.இராமநாதன், தங்கம்மாள் உள்ளிட்டோர் உரை நிகழ்த்தினர். உணவு, சிற்றுண்டி என தடபுடலாக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. திருவிழா போல மக்கள் மாநாட்டைக் கொண்டாடினர். குறிப்பாக, பெண்களும், ஆதிதிராவிடர்களும் பெரும் எண்ணிக்கையில் கலந்துகொண்டுள்ளனர். முசிறி, துறையூரைச் சேர்ந்தவர்கள் தங்கள் ஊரிலும் இதுபோல சுயமரியாதை மாநாட்டைக் கூட்டப்போவதாக உற்சாகமாகக் கூறிச் சென்றனர்.

**...கூட்டம் திரளும்**

## மோடி ஆட்சியும் பத்திரிகை சுதந்திரமும்...

‘மோடி ஆட்சியில் பத்திரிகை சுதந்திரம் அவசர நிலையை விட, மோசமாக உள்ளது’ என ’தி வயர்’ இணையதள கட்டுரையை மொழிபெயர்த்து தீக்கதிர் வெளியிட்டுள்ளது அதிலிருந்து...

“மகாத்மா காந்தி, ’ஆளும் கட்சி தனது சொந்த பிரச்சாரத்திற்கும், பிம்பத்தை உருவாக்குவதற்கும் ஊடகங்களைப் பயன்படுத்துவது சர்வாதிகாரத்திற்கு வழிவகுக்கும்” என எச்சரித்தார். அன்று காந்தி கூறியதை இன்று மோடி தலைமையிலான ஒன்றிய பா.ஜ.க. அரசு செயல்படுத்தி வருகிறது.

பத்திரிகை சுதந்திரக் குறியீட்டில் இந்தியா 151-வது இடத்தைப் பிடித்துள்ளது. கடுமையான சட்டங்களைப் பயன்படுத்தி பத்திரிகையாளர்கள் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். ‘நியூஸ் கிளிக்’ போன்ற செய்தித்தளம் காவல்துறை மற்றும் அமலாக்கத்துறை உள்ளிட்ட நிறுவனங்களின் சோதனைகளை எதிர்கொண்டுள்ளன.

சமீபத்தில் கூட எந்த முன்னறிவிப்பும் இல்லாமல் மோடியின் ஆட்சி பல்வேறு யூடியூப் செய்தி சேனல்களையும், ‘தி வயர்’ வலைதளத்தை அணுகுவதையும் தடுத்தது. சி.என்.என். செய்தி நிறுவனத்தை மேற்கோள்காட்டி, ஆபரேஷன் சிந்தூரின்போது இந்தியாவின் இராணுவ விமான இழப்புகளை கூறிய செய்தியை நீக்கிய பின்னரே தி வயருக்கு அணுகல் அனுமதிக்கப்படும் என்று கூறப்பட்டது.

ஹத்ராஸில் ஒரு தலித் பெண் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டதை செய்தியாக்கும் பணியில் ஈடுபட்டதற்காக உத்தரப் பிரதேசத்தில் பத்திரிகையாளர் சித்திக் கப்பன் கைது செய்யப்பட்டார். ஜம்மு-காஷ்மீரில் இணைய சேவை முடக்கம், தடை உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்ட விதம், ஸ்ரீநகர் பத்திரிகையாளர் மன்றம் மூடப்பட்டது ஆகியவை ஆட்சியின் சர்வாதிகார தூண்டுதல்களைப் பிரதிபலிக்கின்றன.

சுயாதீன ஊடகங்களைக் குறிவைப்பதன் மறுபக்கம், ‘கோடி மீடியா’ ஊடகங்களுக்கு வகுப்புவாத உள்ளடக்கத்தைப் பரப்புவதற்கு சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. சிறந்த டி.ஆர்.பி. மதிப்பீடுகளுக்காக தொலைக்காட்சி சேனல்களில் வெறுப்பு நிறைந்த கதைகள் ஒளிபரப்பப்படுகின்றன என்று உச்சநீதிமன்றம் கூட கூறியுள்ளது. ஆனால், தடையின்றி விஷத்தைக் கக்கும் சேனல்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை” என்கிறது அந்தப் பதிவு.

# பாசறை படிப்பறை

கெளதம் ராஜ்


**70**

**சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

## முடிவுகளுக்கு அப்பால்...

அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்ட 50-வது ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கிறோம். சமகாலத்திலும் அரசியல்-பொருளாதாரம்-சமூகப் புலங்களில் அறிவிக்கப்படாத அவசர நிலையை மக்களும் மாநிலங்களும் சந்தித்து வருகின்றன. இத்தருணத்தில், நீண்ட நெடிய 1970-களின் இந்திய அரசியலை சீர்தூக்கிப் பார்ப்பது அவசியமாகிறது.

அரசியல் விடுதலை பெற்ற இந்தியாவில் முதல் பெண் பிரதமராகப் பொறுப்பேற்றவர் இந்திராகாந்தி. தேசிய விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த காங்கிரஸ் தலைவர்கள் அனைவரும் தங்களது அந்திமக் காலத்தில் அரசியல் செய்து கொண்டிருந்த சமயத்தில், புயல் போல் நுழைந்து அரசியலைப் புரட்டிப்போட்டார், வங்கதேசம் என்ற ஒரு நாடு உருவாக உடன் நின்றார். அதைத் தொடர்ந்து அவர் கட்டமைத்துச் சென்ற சீஸரிஸ (Caesarist) கவர்ச்சி அரசியலின் தாக்கத்தை, மோடியின் ரூபத்தில் 21-ஆம் நூற்றாண்டிலும் நாம் அனுபவித்து வருகிறோம்.




அண்மையில் இந்திரா காந்தி அம்மையார் அவர்களின் அரசியலைப் பிரதானமாக கொண்ட வாழ்க்கை வரலாற்று நூல் ஒன்று வெளியாகி இருக்கிறது. *‘Indira Gandhi and the Years That Transformed India’* என்ற அந்நூலை வரலாற்றாய்வாளர் ஸ்ரீநாத் ராகவன் எழுதியிருக்கிறார். பென்குயின் பதிப்பகம் இந்நூலை வெளியிட்டுள்ளது.

லால் பகதூர் சாஸ்திரியின் எதிர்பாரா மறைவு, இந்திரா காந்தியை பிரதமர் நாற்காலியை நோக்கி நகர்த்தியது. காங்கிரஸ் கட்சியில் காமராஜர், மொரார்ஜி தேசாய் போன்ற மூத்தவர்கள் ஆதிக்கம் செலுத்தி வந்த நிலையை மாற்ற எண்ணிய நேரத்தில், காங்கிரஸ் கட்சி முதல் பிளவை எதிர்கொண்டது. பொருளாதாரத்தில் அதுவரை இல்லாத தேக்க நிலை, குறைந்த அளவிலான உள்நாட்டு உற்பத்தி, உணவுப் பற்றாக்குறை, பசி, பஞ்சம், அண்டை நாடுகளுடனான போர் போன்ற சிக்கல்களும் ஆள்பவர்களைச் சூழ்ந்து கொண்டன.

இப்படிப் பல்வேறு நெருக்கடிகளால் இந்தியா சூழப்பட்ட சமயத்தில் இந்திரா காந்தி அம்மையார் கையில் அதிகாரம் கிடைக்கிறது. அதை அவர் தன் போக்கிற்கு எப்படிப் பயன்படுத்தினார், அதனால் விளைந்த வினைகள் என்ன, எண்ண முடியா மாற்றங்களை ஏற்படுத்திய காரணிகள் எவை என்பதை எல்லாம் 360 டிகிரி பார்வையில் நமக்கு வழங்குகிறது இந்நூல்.

அவசர நிலை அமல்படுத்தப் படுவதற்கு ஒரு பிரச்சினை மட்டும் காரணமாக இருக்கவில்லை, பொருளாதார மந்த நிலையால் விளைந்த மாணவர் போராட்டம், உள்நாட்டு சிக்கல், அரசியல் நெருக்கடி உள்ளிட்ட பல்வேறு காரணங்கள் இருப்பதை, இந்நூல் நமக்கு எவ்வித பாரபட்சமும் இன்றி சுட்டிக் காட்டுகிறது. அதிலும் குறிப்பாக இந்திரா காந்தி எடுத்த முடிவுகளுக்குப் பின்னணியிலிருந்த அரசியல்வாதிகள்-அதிகாரிகள்-ஆலோசகர்களின் செல்வாக்கை வாசிக்கும்போது பல வியப்பூட்டும் தகவல்களை அறிய முடிகிறது.

சட்ட மன்றம் மற்றும் நீதித் துறையை விட, நிர்வாகத் துறையை வலுவான ஒன்றாகக் கட்டமைக்கத் தன் வாழ்நாள் முழுக்க முயன்றார் இந்திரா காந்தி அம்மையார். அதன் துணை விளைவாக எமர்ஜென்சி உருவெடுத்தது, இன்றைக்கு ஒன்றியத்தில் ஆள்பவர்களும் அதைச் செயல்படுத்த மிகத் தீவிரமாக முயன்று கொண்டிருக்கிறார்கள். அப்படி மேற்கொள்ளப்படும் முயற்சிகளின் அபாயத்தை உரிய தர்க்கங்களோடு விளக்கும் இந்நூல் அவசியம் வாசிக்கப்பட வேண்டிய ஒன்று.

**...வாசிப்போம்.**

## ஃப்ளாஷ்பேக்



### என்றும் கலைஞர் வழி!



எஸ்.ஏ.அப்துல் காதர்

1994-ஆம் ஆண்டு வாக்கில் கோயம்புத்தூர் வந்த அன்றைய கழகத் தலைவர், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களை பொதுக்கூட்ட மேடை ஒன்றில் கண்டு மகிழ்ந்த தருணம். இளமையில் இருந்து இன்று வரை ஒரே இரு வண்ணக் கழகக் கொடிதான். அன்றும்... இன்றும்... என்றும் கலைஞர் வழியில்..

**– எஸ்.ஏ.அப்துல் காதர், எம்.சி.,**
**குறிச்சி வடக்குப் பகுதி செயலாளர்,**
**மாவட்ட திட்டக்குழு உறுப்பினர்,**
**95-வார்டு மாமன்ற உறுப்பினர், கோயம்புத்தூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## நறுக்கு

### நாடாளுமன்றத்தில் அண்ணா

1957-இல், தமிழ்நாடு பெயர் மாற்றம் தொடர்பாக, நாடாளுமன்றத்தில் முழங்கினார் பேரறிஞர் அண்ணா. “பார்லிமென்ட்டை, ‘லோக்சபா’ என்றும்,‘கவுன்சில் ஆஃப் ஸ்டேட்ஸை’ ‘ராஜ்யசபா’ என்றும் பெயர் மாற்றி என்ன சாதித்திருக்கிறீர்கள்? பிரசிடென்ட்டை ‘ராஷ்டிரபதி’ ஆக்கியதாலும் என்ன லாபம் கிடைத்தது? ஆக, என் மாநிலத்துக்கு ‘தமிழ்நாடு’ என்ற பெயரை நீங்கள் கொடுத்தே ஆக வேண்டும்” என்று தர்க்கப்பூர்வமாக முழங்கினார். ஆனால், அவரது கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131